# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண். 13/2014**

வாக்குமூலம் பி..வா.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தொழில் | |
| த/பெ. | சுப்பையா | வயது | 40/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 29.04.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. உண்ணாமலையம்மாள் மற்றும் அவரது மகன் சுப்ரமணியன் ஆகியோரை தெரியும். அவர்களிடமிருந்து 1 ம் பிரதிவாதி 27.03.1991 ம் தேதி 8.06 சென்ட் கிரயம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் கிரயம் வாங்கியது தவறு. 1 ம் பிரதிவாதி தரப்பில் அவர் பெற்ற கிரயப்பத்திரம் பி. வா.சா. ஆ.1 ஆக குறியீடு செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி மனைவி பெயர் நாகரத்தினம்மாள் என்றால் சரிதான். நாகரத்தினம்மாள் மேற்படி உண்ணாமலையம்மாள் மற்றும் சுப்ரமணியனிடமிருந்து 27.01.92 ம் தேதி 6.56 சென்ட் கிரயம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான் ஆனால் அது தவறு. மேற்படி கிரய ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாங்கப்பட்ட பகுதி தவறு.1 ம் பிரதிவாதியின் மனைவி நாகரத்தினம்மாள் 2001 ம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான்.கிரயம் வாங்கிய சமயத்தில் கிரயசொத்து அமைந்துள்ள லட்சுமிநரசிம்மபுரம் பல்லத்திவயல் வருவாய்கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான்.

2. பின்னிட்டு மேற்படி கிரய சொத்து நகரநிலஅளவைக்கு உட்படுத்தப்பட்டு நகராட்சி செட்டில்மெண்ட் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். வழங்கியது தவறு. நகரபட்டா வழங்கியபோது 1 ம்பிரதிவாதி வேலுவின் மனைவி இறந்ததால் அவருடைய மனைவியின் இடத்திற்கும் சேர்த்து 1 ம் பிரதிவாதி வேலு பேரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டா 1 ம் பிரதிவாதி தர்ப்பில் பி.வா.சா.ஆ 3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அதை அனுசரித்து மேற்படி இரு கிரய சொத்துகளுக்கும் 1 ம் பிரதிவாரி பேரில் நகர நிலஅளவை செட்டில்மெண்ட் மற்றும் துய

அடங்கள் பதிவு செய்யப்பட்டு அவை 1ம் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ 4.5 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3.மேற்படி பி.வா.சா.ஆ. 3 . 4 . 5 படி 1ம் பிரதிவாதி வேலு பேருக்கு அறந்தாங்கி நகராட்சி வார்டு டீ பிளாக் 10 நகரபுல எண் 50ல் 597 சதுர மீட்டருக்கு பட்டா வழங்கபட்டுள்ளது என்றால் கொடுக்கப்பட்டுள்ளது அது தவறு. மேற்படி பட்டாவை எதிர்த்து பட்டா மேல்முறையீடு எதுவும் நான் தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. செய்திருக்கிறோம். அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட நகரபட்டாவை எதிர்த்து மேல்முறையீடு செய்ததாக நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் அரசு விவசாயத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். என் தகப்பனார் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் வகையில் நல்லநிலைமையில் இருக்கிறார் என்றால் சரியல்ல வயேதிகம் காரணமாக அவருக்கு செவித்திறன் குறைந்து விட்டது. மேலும் அவர் ஒரு மாற்றுதிறனாளி ஆவார். 3ம் பிரதிவாதிதான் அவருடைய வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

4 நான் வருவாய் துறையில் கிராம உதவியாளராக கடந்த 10 வருடமாக இருக்கிறேன்.1 ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி கிரயம் பெற்ற இடங்கள் கல்லுகால் வேலிக்குள் இருக்கிறது என்றால் சரியல்ல. வேலி போட்டு அடைக்கவில்லை கருவை மற்றும் வாகை மரம் மண்டிகிடக்கிறது. வாதி சச்சிதானந்தம் எனது உறவினர் என்றால் சரிதான். வாதி அவரது வழக்குரையில் புல எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 17 நகரபுல எண் 47 க்கான புல வரைபடம் மற்றும் பி.வா.சா.ஆ. 18 நகர நிலஅளவை செட்டில்மெண்ட் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள வார்டு டி பிளாக் 10 நகரபுல எண் 47 ஆகும். அதனை அனுசரித்துதான் பி.வா.சா.ஆ.17 நகரபுல எண் 47க்கான புலவரைபடம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வேலு பேரில் பதிவாகியுள்ள நகரபுல எண் 50 க்கும் நான் ஆவணம் தாக்கல் செய்துள்ள நகரபுல எண் 47 க்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

5. என்னுடை எதிர்வழக்குரையில் 9 வது பத்தியில் 19 சென்ட் 3ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதாகவும் கீழ்புறம் உள்ள சொத்துடன் சேர்த்து நகர நிலஅளவையில் வார்டு டி பிளாக் எண் 10 நகரபுல எண் 47 விஸ்திரணம் 0.3250.0 சதுர மீட்டர் என அளவை செய்யப்பட்டு தங்கவேல் பிள்ளை சம்புரணத்தம்மாள் மற்றும் 3 ம் பிரதிவாதி ஆகிய மூவருக்கும் கூட்டு பட்டா வழங்கப்பட்டு இருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.1ம் பிரதிவாதி வேலு அரசு ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான்.

1 ம் பிரதிவாதி அறந்தாங்கி நகரத்தில் தங்கி அங்கிருந்து 7 கிலோமிட்டர் தூரத்தில் அமைந்துள்ள பூவை மாநகரில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை அங்கிருந்து பல ஊர்களுக்கு மாற்றலாகி வேலை பார்த்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.,

**வாதிதரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**